## வல்லரசு நாடுகளுக்கு நிகராக பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கீடு!

# சிங்கள எதிர்ப்பாளர்களாக தமிழர்களைக் காண்பித்ததன் விளைவே இது என கோவிந்தன் கருணாகரம் எம்.பி. சாடல்

நம் நாட்டின் தமிழ் மக்களை, சிங்கள பௌத்த எதிர்ப்பாளர்களாகத் தென்னிலங்கை சித்தரித்ததன் விளைவே இன்றைய பாதுகாப்புச் செலவீனங்களின் ஒதுக்கீடுகளாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று (23) இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரரீதியில்வங்குரோத்து அடைந்த நிலையிலிருந்து சற்று எழும் நிலையில், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக பாரிய நிதி ஒதிக்கீட்டிற்கு உட்பட்ட துறையாக பொது மக்கள்



பாதுகாப்பு அமைச்சு செயற்பட்டு வருகின்றது.

வல்லரசு நாடுகளான அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்றன தமது நாட்டின் பாதுகாப்புத் துறைக்கு வரவு செலவுத் திட்டத்திலிருந்து 12 மற்றும் 13 சதவீதங்களுக்கு இடைப்பட்ட தொகையையே ஒதுக்குகின்றன.

அந்நிய அச்சுறுத்தல் இல்லாத நமது நாடும் இந்நாடுகளைப் போன்றே அவற்றுக்குச் சமமான தொகையைப் பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கியுள்ளது.

நமது நாட்டிற்கு அந்நிய நாடுகளினால் அச்சுறுத்தல் இல்லை. நமது நாட்டின் பாதுகாப்புக்கும் சமத்துவத்திற்கும் அச்சுறுத்தலாக இருப்பது நாட்டின் ஆட்சியாளர்களே!, எனவும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார். (04)


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 07 வியாழக்கிழமை 23.11.2023 கதிர் 119



யாழ்ப்பாணத்தில் உதித்த ஒரு புதிய வியாபாரக்குறி
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்




# நெல்லியடி மாலி சந்தியில் மாவீரர் அஞ்சலி மண்டபம்

வடமராட்சி - நெல்லியடி மாலிசந்திப் பகுதியில் மாவீரர்களின் பெயர்ப் பட்டியல் பொறிக்கப்பட்ட பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டு, மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாவீரர் நினைவு மாதிரி மண்டபத்தில் மக்கள் சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்த நினைவு மண்டபத்தில் மாவீரர் வார இறுதி நாளான நவம்பர் 27 வரை அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (01)

## கைதுசெய்து தாக்கப்பட்டு இறந்ததாகக் கூறப்படும் இளைஞரின் மரணம் தொடர்பான விசாரணை நாளை

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் இளைஞரின் மரணம் தொடர்பிலான வழக்கு விசாரணை நாளைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில், யாழ்ப்பாண நீதவான், யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு நேரில் சென்று அங்குள்ள அதிகாரிகளிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதோடு, உயிரிழந்த இளைஞனுடன் கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞனிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக நாளைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணிப் பகுதியைச் சேர்ந்த

2

## வருத்தம் தெரிவித்தார் சனத் நிஷாந்த சபாநாயகருக்கு கடிதம் அனுப்பினார்

நாடாளுமன்றத்தில் அண்மையில் எதிர்க்கட்சித்தலைவர்உரையாற்றியபோது இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகத் தாம் கவலையடைவதாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2



## வடக்கு, கிழக்கில் சேவையாற்றும் பொலிசாருக்கு தமிழ் மொழியறிவு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கும் வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டக் குழு விவாதத்தின் இரண்டாம் நாளான இன்று பாதுகாப்பு அமைச்சு

2

## உணவு சுற்றும் தாள்களை உண்ணுமாறு தண்டனை வழங்கிய பாடசாலை அதிபர்

### உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டார்

மதிய உணவைப் போர்த்தியிருந்த பொலித்தீன் லஞ்ச் சீட்களை உண்ணுமாறு பாடசாலை மாணவர்களை வற்புறுத்தியதாகக் கூறப்படும் ரம்புக்பிட்டிய மத்திய கல்லூரியின் அதிபர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கம்பளை வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை சமர்ப்பித்து உரையாற்றியபோது கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி, ரம்புக்பிட்டிய மத்திய கல்லூரி மாணவர்கள், மதிய உணவைப் பொதிந்து பள்ளிக்குக் கொண்டு வந்த பொலித்தீன் லஞ்ச் சீட்டுகள் மற்றும் செய்தித்தாள்களை விழுங்குமாறு கட்டாயப்படுத்திய சம்பவம் ஒன்று

2

# இளைஞனின் மரண வழக்கில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல சட்டத்தரணிகளும் முன்னிலையாகவேண்டும்!

### சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா அழைப்பு



வட்டுகோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்தார் என்று கூறப்படும் சம்பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், பாதிக்கப்பட்டவருக்கு நீதிகோரி இந்த வழக்கில் 35க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகத் தீர்மானித்துள்ளனர்.

2

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## உணவு சுற்றும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றையதினம் பதிவாகியுள்ளது. இது தொடர்பாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரிடம் நேற்றைய தினத்திலேயே தொடர்பு கொண்டு தகவல்களை கேட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

குறித்த பாடசாலையின் தரம் 11 வகுப்பு மாணவர்கள் குழுவொன்றே தமது மதிய உணவை பொலித்தீன் லஞ்ச் சீட்களில் சுற்றப்பட்ட நிலையில் பாடசாலைக்கு கொண்டு சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இப்பாடசாலை பொலித்தீன் அற்ற வலயமாக பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், குறித்த மாணவர்களை அவர்கள் கொண்டுவந்த லஞ்ச் சீட்கள் மற்றும் செய்தித்தாள்களை உண்ணுமாறு பாடசாலையின் அதிபர் வற்புறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தண்டனைக்கு உள்ளான இரண்டு மாணவர்கள் நேற்றுக் காலை நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சுகயீனமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சம்பவத்திற்கு முகம் கொடுத்த ஏனைய ஐந்து மாணவர்களும் இன்று பாடசாலைக்கு வந்துள்ளதாகவும், இது தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸாருக்கும் நேற்று முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி, பஸ்பாகே பிரதேச கல்விப் பணிப்பாளரினால் ஸ்தல விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும், விசாரணையின் வசதிக்காக குறித்த அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (த)

## வருத்தம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டு வார காலத்திற்கு நாடாளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதற்குத் தனக்குத் தடை விதித்துள்ளமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றில் எதிர்கட்சித் தலைவர் உரையாற்றியபோது இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகத் தாம் வருத்தம் தெரிவிப்பதாகவும், தான் அவ்வாறு நடந்திருக்கக் கூடாது எனவும் அவர் குறித்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஆகியோரின் செயற்பாடு நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் வகையில் அமைந்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, அவர்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிரந்த, சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார். (04)

## கைதுசெய்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாகராசா அலெக்ஸ் என்ற 26 வயதுடைய இளைஞர் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுகிழமை உயிரிழந்தார்.

குறித்த இளைஞரின் உயிரிழப்பு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் இடம்பெற்றமையால், இளைஞனின் உயிரிழப்பு தொடர்பிலான விசாரணைகள் யாழ்ப்பாண நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்று வருகின்றன.

இளைஞரின் சடலம் தொடர்பான உடற்கூற்றுப் பரிசோதனைகள் கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில், சட்ட வைத்திய அதிகாரி மயூரதன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

அதன்போது, நீதவான் வைத்தியசாலைக்கு நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சிறைச்சாலைக்கு நேரில் சென்று சிறைச்சாலை அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களிடமும் வாக்குமூலங்களை அவர் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, உயிரிழந்த இளைஞருடன் கைதான மற்றைய இளைஞர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் கடந்த 21 ஆம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

## வடக்கு, கிழக்கில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகிய இரு அமைச்சுக்களின் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (04)

## இளைஞனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா, இளைஞனின் மரணம் கொலை என்பது தெட்டத் தெளிவானது.

இந்த வழக்கு நடவடிக்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துச் சட்டத்தரணிகளும் இணைந்து கொள்ள வேண்டும். பிரதானமாக குற்றவியல் வழக்குகளில் அனுபவம் வாய்ந்தவர்களும் இணைந்துகொள்ள வேண்டும், என்று அழைப்பு விடுத்தார்.

நாளைய தினம் வழக்கு நடைபெறவிருக்கின்றது. அன்று அவரது உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தொடர்ச்சியான சித்திரவதையால்தான் இளைஞர் மரணமடைந்துள்ளார்.

இந்தக் கொலை தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை பொலிஸ் தரப்பில் விரைவாக எடுக்க வேண்டும். அனைத்து விடயங்களும் நீதிமன்றத்துக்கு வரவேண்டும். இந்தக் கொலைக்குக் காரணமான அனைவரும் நீதிமன்றில் உடனடியாக முற்படுத்தப்பட வேண்டும்.

இந்த நோக்கத்துடன் யாழ்ப்பாணம் நீதிமன்றில் விண்ணங்களை முன்வைப்போம்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சட்டத்தரணிகள் அனைவரும் இந்த நடவடிக்கையில் இணைந்துகொள்ள வேண்டும். பொலிஸ் காவலில் மரணம் என்பது சட்டத்தின் ஆட்சிக்கே விடுக்கப்பட்ட பகிரங்கச் சவால். அதை நாம் எதிர்கொள்வோம், என்றும் அவர் தெரிவித்தார். (01)

# மாவீரர் நினைவிடத்தில் கொடிகள் அறுப்பு!

கொடிகாமம் -பருத்தித்துறை வீதியில் இராணுவ முகாம் முன்பாக அமைந்துள்ள மாவீரர் நினைவேந்தல் இடத்தில் கட்டப்பட்டிருந்த கொடிகள் அறுக்கப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் இந்தக் கொடிகள் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளரான, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த செ.மயூரன் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். (01)

# மதுபோதையில் பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்த நபர்

மதுபோதையில் வந்த நபர் மருதங்கேணியில் விசாரணைக்குச் சென்ற போலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைக்க முற்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மருதங்கேணி நித்தியவெட்டை பகுதிக்குக் கடமை நிமித்தம் தனது மோட்டார் சைக்கிளில் சென்று, மோட்டார்சைக்கிளைவீதியில்நிறுத்திவிட்டு, வீடொன்றில் விசாரணை நடவடிக்கையை மேற்கொண்டபோது , வீதியில் நின்ற மோட்டார் சைக்கிளுக்கு மதுபோதையில் வந்த நபர் தீ வைக்க முற்பட்டுள்ளார்.

இதனை பொலிஸ் உத்தியோகத்தர் அவதானித்ததும் குறித்த நபர் தப்பிச் சென்றுள்ளார். விரைந்து சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் தீயை அணைத்துள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிளின் என்ஜின் பகுதி சிறிதளவு சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (04)

# மேலுமொரு நாடாளுமன்ற தெரிவுக்குழு ஜனாதிபதி இன்று மன்றில் அறிவித்தார்



உயர் பதவிகளுக்கான பெயர்களை அங்கீகரிப்பதில் அரசியலமைப்புச் சபையால் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இன்று காலை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்தத் தகவலைத் தெரிவித்தார். (த)







## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799



உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# புத்தூரில் வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா





புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் வாசிப்பு மாதத்தை ஒட்டிய பரிசளிப்பு நிகழ்வு அதிபர் சி.திரிகரன் தலைமையில் நேற்று புதன் கிழமை காலையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கியதோடு வாசிப்புத் தொடர்பாக சிற்றுரை ஒன்றையும் ஆற்றினார்.

# குறிஞ்சிப்பிட்டி நலன்புரி சங்கத்தினால் குர்ஆன் மதுரஸாவிற்கு மின்சார வசதி

(கற்பிட்டி - எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி - குறிஞ்சிப்பிட்டியில் நீண்ட நாட்களாக பல்வேறு சமூக சேவைகள் வேலைத்திட்டங்களையும் உதவித்திட்டங்களையும் செய்து வரும் குறிஞ்சிப்பிட்டி நலன்புரிச் சங்கம் அதன் வேலைத்திட்டத்தின் கீழ், நீண்ட நாட்களாக குறிஞ்சிப்பிட்டியில் மின்சார வசதியின்றி இயங்கி வரும் குர்ஆன் மதுரஸாவிற்கு மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான மின் இணைப்பு உபகரணப் பொருட்கள் மதுரஸாவிற்கு பொறுப்பான மௌலவி பாரீஸ் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இது போன்று இன்னும் பல்வேறு வேலைத்திட்டத்தின் ஊடாக உதவிகள் எதிர்காலத்தில் தமது நலன்புரி சங்கத்தினால் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் ஏ.ஆர்.எம் ஜெஸ்பர் தெரிவித்தார்.

# உலக உணவுத் திட்டம் மூலமாக உலர் உணவுப் பொதிகள் வழங்கல்




(ஹஸ்பர்)

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதி வழங்கி வைக்கும் நிகழ்வானது நேற்றுமுன்தினம் (21) வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நடைபெற்றது.

வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆநெய்த்தீவு, இலங்கைத்துறை முகத்துவாரம் மற்றும் வெருகல் முகத்துவாரம் கிராமசேவகர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட 735 பயனாளி களுக்கு தலா 20 கிலோ துவரம் பருப்பு மற்றும் 5 லீற்றர் சமையல் எண்ணெய் என்பன வழங்கி வைக்கப்பட்டன.



# இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாமல் ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டம்

(விரி.சகாதேவராஜா)

நேர்மையான இலங்கை எனும் தொனிப்பொருளின் கீழ் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாது ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டம்தொடர்பானபயிற்சிப்பட்டறை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேசசெயலாளர்திருமதிசிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பு, எமக்குத் தேவையான வளங்களை பயன்படுத்திவிட்டு எஞ்சிய வளங்களை எதிர்கால தலைமுறைக்காக பாதுகாத்து வைப்பதேயாகும்.

இந்த நோக்கை அடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்ற பயிற்சிநெறியில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விளக்கம் மற்றும் சட்ட ஏற்பாடுகள், அவற்றினால் ஏற்படும் பாதக விளைவுகள் என்பன தொடர்பாக வளவாளர்களான பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் ஆகியோர் விளக்கமளித்தனர்.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக சம்பவ கற்கைகள் மூலமும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

இந்தச் செயலமர்வானது பிரதேச அலுவலக உத்தியோகத்தர்களுக்கு பல கட்டங்களாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வட கொரியாவுடனான ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்தது தென் கொரியா!



தங்களது எதிர்ப்பையும் மீறி உளவுச் செயற்கைக்கோளை வட கொரியா விண்ணில் செலுத்தியதைக் கண்டித்து, அந்த நாட்டுடன் மேற்கொண்டிருந்த சமாதான ஒப்பந்தத்தின் சில அம்சங்களிலிருந்து தென் கொரியா விலகியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் தேசியப் பாதுகாப்புக் கொள்கைத் துறை அமைச்சக இணையமைச்சா ஹியோ டயே-கியூன் அறிவித்துள்ளார்.

உளவுச் செயற்கைக்கேளை விண்ணில் நிலைநிறுத்தியுள்ளதன் மூலம் வட கொரியா பிராந்தியப் பதற்றத்தை அதிகரித்துள்ளது. தென் கொரியப் பாதுகாப்புக்கும் அது அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இதனைக் கண்டித்து, பிராந்தியப் பதற்றத்தைக் குறைப்பதற்காக வட கொரியாவுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தின் சில அம்சங்களிலிருந்து விலகுகிறோம், என அவர் தெரிவித்துள்ளார்.

சாவதேச நாடுகளால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள வட கொரியா, தனது உளவுச் செயற்கைக்கோளைவிண்ணில்செலுத்தஏற்கெனவே இரு முறை முயற்சிகள் மேற்கொண்டு தோல்வியடைந்தது. இந்த நிலையில், மூன்றாவதாக புதன்கிழமை மேற்கொண்ட இதற்கான முயற்சி வெற்றியடைந்ததாக வட கொரியா அறிவித்தது.

இதனை அமெரிக்காவும் ஜப்பானும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை. எனினும், இது தொடாபாக அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகள் வட கொரியாவுக்கு உடனடியாகக் கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில், வட கொரியாவுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தின் ஒரு பகுதியிலிருந்து விலகுவதாக தென் கொரியா தற்போது அறிவித்துள்ளமை உலக அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளது. (04)

# சீனாவின் வடக்கு மாகாணத்திலுள்ள மசூதிகள் அகற்றம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தகவல் வெளியீடு



சீனாவின் வடக்கு மாகாணத்திலுள்ள மசூதிகளை அகற்றும் முயற்சியில் சீன அரசு ஈடுபட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வடக்குச் சீனாவைச் சேர்ந்த நிங்ஸியா மற்றும் கன்சு மாகாணங்களில் உள்ள சிறுபான்மை மதத்தினரான முஸ்லீம்சமூகத்துக்குச் சொந்தமான மசூதிகளை மறுசீரமைப்பது அல்லது இடிப்பது போன்ற செயல்களில் அந்த நாட்டு அரசாங்கம் ஈடுபடுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

நியூயோர்க்கைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆய்வாளர்கள் அளித்துள்ள தரவுகளின்படி, நிங்ஸியா, கன்சு மாகாணங்களில் மசூதிகளின் எண்ணிக்கையைசீனஅரசுகணிசமாகக்குறைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஸி ஜின்பிங் தலைமையிலான ஆட்சி அமைந்ததைத் தொடர்ந்து, சீனாவின் மத மற்றும் இன ரீதியிலான சிறுபான்மையினர் மீது அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும், இதன் ஒருபகுதியாக சீன பாரம்பரியம் அல்லாத சமூகத்துக்குச் சொந்தமான வழிபாட்டுத் தலங்களை இடித்து அதன் வடிவங்களை மாற்றுவதில் சீன அரசு ஈடுபட்டு வருகிறது என்றும் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன.

இஸ்லாமிய மதம் தொடர்பான இடங்கள் மற்றும் கட்டடங்கள் உருவாகுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என கடந்த 2018ஆம் ஆண்டு நேரடியாக சீன அரசு சார்பில் கடுமையான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நிங்ஸியா பகுதியிலுள்ள இரு கிராமப் பகுதிகளில் செயற்கைக்கோள் புகைப்படங்களைக் கொண்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆய்வு நடத்தியுள்ளது.

இதில், 2019 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில், 6 மசூதிகளின் வட்ட வடிவிலான மேற்புறங்கள் அகற்றப்பட்டதும், 4 மசூதிகள் முழுவதுமாகச் சீரமைக்கப்பட்டதும், 3 மசூதிகள் முழுவதுமாக இடிக்கப்பட்டதும் தெரியவந்துள்ளது.

நிங்ஸியா மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் சுமார் 1,300 மசூதிகள் உள்ளன. சீனாவில் அதிக எண்ணிக்கையில் இஸ்லாமிய மக்கள் வாழ்வது இப்பகுதியில்தான். 2020ஆம் ஆண்டுவரை சீனாவில் பதிவாகியுள்ள மசூதிகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு நிங்ஸியாவில் உள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் மறுசீரமைக்கப்பட்ட அல்லது இடிக்கப்பட்ட மசூதிகளின் எண்ணிக்கை துல்லியமாகத் தெரியவில்லை என்றும், ஆனால் அரச ஆவணங்களில் உள்ள தரவுகளின்படி நூற்றுக்கும் மேற்பட்ட மசூதிகளுக்கு அவ்வாறான நிலை ஏற்பட்டு இருக்கலாம் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (04)

# நடவடிக்கை இடைநிறுத்தத்தை மேற்கொள்வோம்!

## இஸ்ரேல் ராணுவ சர்வதேச செய்தித் தொடர்பாளர்



ஹமாஸ் அமைப்பினருக்கும் தங்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் கீழ் தாங்கள் மேற் கொள்ளப்போவதை 'போர் நிறுத்தம்' என்பதற்குப் பதிலாக 'நடவடிக்கை இடைநிறுத்தம்' என்றே அழைக்கப்போவதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் ராணுவத்தின் சாவதேச செய்தித் தொடாபாளா ரிச்சாட் ஹெக்ட் தகவல் வழங்கியபோது, கட்டார் தலைமையில் ஹமாஸுடன் ஏற்பட்டுள்ள ஒப்பந்த அமலாக்கத்தின்போது நாங்கள் தாக்குதலை நிறுத்திவைப்போம். இதற்குப் 'போா நிறுத்தம்' என்ற வார்த்தையை நாங்கள் பயன்படுத்தப்போவதில்லை. அதற்குப் பதிலாக '(தாக்குதல்) நடவடிக்கை இடைநிறுத்தம்' என்ற வார்த்தையைத்தான் பயன்படுத்துவோம்.

காஸாவில் போா நடவடிக்கைகளை நிறுத்துவது தொடாபாக இஸ்ரேல் அரசிடமிருந்து இதுவரை ராணுவத்துக்கு உத்தரவு வரவில்லை. எனவே, அதுவரை எங்களது தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும்.

ஹமாஸ் அமைப்பினருடனான ஒப்பந்த அமலாக்கம் எப்போது தொடங்கும் என்பதைக் கூற முடியாது. இப்போதைய நிலையில் காஸாவில் எங்களது சண்டை தொடரும், என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, எகிப்து மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் கூறுகையில் உள்ளூர் நேரப்படி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு (இலங்கை, இந்திய நேரப்படி பிற்பகல் 1.30 மணி) போா நிறுத்த அமலாக்கம் ஆரம்பமாகும் என்று தெரிவித்திருந்தனா. (04)



# ஈராக்கிலுள்ள ஹிஸ்புல்லா நிலைகள் மீது அமெரிக்க போர் விமானங்கள் தாக்குதல்

ஈராக்கிலுள்ள 2 ஹிஸ்புல்லா நிலைகள் மீது தங்களது போா விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா கூறியுள்ளது.

காஸா போரின் எதிரொலியாக, மேற்கு ஆசியப் பகுதிகளில் உள்ள அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, ஈராக்கில் இருந்து செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினா அமெரிக்க ராணுவ நிலைகளில் தாக்குதல் நடத்தினா.

முதல்முறையாக குறுகிய தொலைவு 'பலிஸ்டிக்' வகைஏவுகணைகளைப்பயன்படுத்திஹிஸ்புல்லாக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனா்.

அதற்குப் பதிலடியாக, அல் அன்பாா மற்றும் ஜுா்ஃப் அல் சாக்கா பகுதிகளுக்கு அருகே உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரின் செயல்பாட்டு மையங்கள் மீது அமெரிக்கப் போா விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று அதிகாரிகள் கூறினா.

சிரியா மற்றும் இராக்கில் உள்ள அமெரிக்க நிலைகள் மீது கடந்த மாதம் 17 ஆம் தேதியிலிருந்து இதுவரை 66 முறை ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)

# காஸா மீதான தாக்குதல் நிறுத்தம் பிரான்ஸ் அதிபர் மக்ரோன் வரவேற்பு



காஸா மீதான தாக்குதலை 4 நாள்கள் நிறுத்துவதாக இஸ்ரேல் அரசு அறிவித்ததற்கு பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன் வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவாகளின் எண்ணிக்கை 13,300 ஐக் கடந்ததாக அந்தப் பகுதி சுகாதாரத் துறை கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

பிணைக் கைதிகளை மீண்டும் தாயகம் அழைத்து வர இஸ்ரேல் முடிவெடுத்துள்ளது. முதல் கட்டமாக 4 நாள்களுக்குள் பெண்கள், குழந்தைகள் உள்பட 50 பிணைக் கைதிகளை ஹமாஸ் படையினர் விடுவிக்கவுள்ளதால், அதுவரை காஸா மீதான தாக்குதல் நிறுத்தப்படும் என இஸ்ரேல் அரசு தெரிவித்தது.

இது குறித்து பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன் டுவிட்டர் (எக்ஸ்) தளத்தில் இட்டுள்ள பதிவில்,

பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தம் மற்றும் மனிதாபிமானப் போர் நிறுத்த அறிவிப்பை நான் வரவேற்கிறேன். பிணைக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க அயராது உழைத்து வருகிறோம்.

அறிவிக்கப்பட்டுள்ள மனிதாபிமானப் போர்நிறுத்தம் மூலம் காஸாவில் உள்ள மக்களை மீட்கவும், உதவிகளை வழங்கவும் அனுமதிக்க வேண்டும், எனத் தெரிவித்துள்ளார். (04)

# தொழில் பயிற்சி நிலையங்களில் மாற்றுத் திறனாளிகளை இணைப்பதற்கான நேர்முகத்தேர்வு திருகோணமலையில்



(ஹஸ்பர்)

மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலையத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சை திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் இன்று (23) இடம் பெற்றது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் குறித்த தொழில் பயிற்சி நிலையங்கள், தொழில் பயிற்சிப் பாடநெறிகளைக் கற்பதற்கான ஒரு வாய்ப்பாக காணப்படுகின்றன.

தையல்பயிற்சி, இயந்திர தொழிநுட்பம் உள்ளிட்ட பாடநெறிகளைக் கற்பதற்காக இந்த நேர்முகத்தேர்வு இடம்பெற்றுள்ளது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு உட்பட தேசிய மட்டங்களில் ஏனைய மாவட்டங்களிலும் இந்நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இன்று நடைபெற்ற நேர்முகப் பரீட்சை நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் த.பிரணவன், தொழில் பயிற்சி நிலைய பொறுப்பதிகாரிகள், சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயத்தில் 8 வருடங்களின் பின்னர் புலமையில் மாணவி சித்தி

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை ஹிஜ்ரா முஸ்லிம் வித்தியாலயத்தில் 8 வருடங்களின் பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவி அய்யூப் கான் இஸ்ஸத் வெட்டுப்புள்ளிகளுக்கு மேற் பெற்றுச் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளார்.

பொருளாதார ரீதியாக தேவையுடைய சம்மாந்துறை சென்நெல் கிராம் 2 இல், குறிஞ்சிச் சாரலில் அமையப் பெற்ற ஹிஜ்ரா பாடசாலையில் பல பௌதீக வளத் தேவைகளுக்கு மத்தியில் மாணவி இஸ்ஸத் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இம்மாணவியின் சாதனையைப் பாராட்டும் முகமாக பாடசாலைச் சமூகம் நேற்று முன்தினம் அதிபர் வை.பி.எம். இஸ்மாயில் தலைமையில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து அல்ஹாஜ் எஸ்.எல். முகம்மது ஹனீபா பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விசேட உரையினை உளவள ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் நிகழ்த்தினார். விசேடமாக தரம் 1 முதல் 5 வரை இம்மாணவிக்கு கற்பித்த சகல ஆசிரியர்களும் நன்றி தெரிவிக்கப்பட்டு, கௌரவமும் வழங்கப்பட்டது.

# கல்முனைக் கோட்ட கவின்நிலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனைக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளின் தரம் 3 மற்றும் தரம் 4 வகுப்புகளின் கவின்நிலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளரும், உதவிக்கல்வி பணிப்பாளருமான யூ.எல். றியால் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியர்களின் முறையான கலைத்திட்ட முகாமைத்துவ செயற்பாடுகள், மாணவர்களின் மனவெழுச்சி செயற்பாடுகள், புத்தாக்க சிந்தனைகள், கற்றல் கற்பித்தல் செயன்முறையில் நவீன தகவல் சார் தொழில்நுட்ப சாதனங்களின் பிரயோகம், பெற்றோர் தரவட்ட பங்களிப்பு, பொலித்தீன் அற்ற வகுப்பறை கழிவு முகாமைத்துவம் என்பவற்றின் ஊடாக உயிரோட்டமானதும், செயற்பாடுகளுடான புலன் சார்ந்த மறைமுக கற்றல் மாணவர்களிடத்தில் உருவாகின்ற என்னுடைய அழகான வகுப்பறை என்ற எண்ணக்கரு அடிப்படையில் இந்த கவின்நிலைப் போட்டி நடைபெற்றதாக நிகழ்வில் உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட மற்றும் வெற்றி பெற்ற தரம் 3,4 வகுப்பாசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபீர், பீ. ஜிஹானா ஆலிப், ஆசிரியர் ஆலோசகர்களான வை.ஏ.கே.தஸ்னீம், எம்.எம். சியாம், வளவாளர் எஸ்.எம்.எம். அன்சார் உட்பட கல்முனைக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# வைத்திய கலாநிதி டி.கோபிசங்கருக்கு விஞ்ஞான ஆராய்ச்சி ஜனாதிபதி விருது



விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது வைத்திய கலாநிதி டி.கோபிசங்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுகள் வழங்கும் விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றபோதே வடக்கு மாகாணத்தில் ஏற்படும் விபத்துக்கள் பற்றி 2020 ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழிநுட்பவியலாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தேசிய ஆராய்ச்சிச் சபையால் வருடாந்தம் இவ்விருது விழா ஏற்பாடு செய்யப்படுகின்றது. (01)






# தில்லையூர் அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் புலமைப் பரீட்சையில் 148 புள்ளி பெற்ற மாணவி

(கற்பிட்டி - எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் இம்முறை நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் மொஹமட் அஸ்கர் பாத்திமா ஹிக்மா என்ற மாணவி வெட்டுப்புள்ளிக்கு மேலாக 148 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர் கற்பிட்டி புதுக்குடியிருப்பில் வசிக்கும் ஏ.ஆர்.எம் அஸ்கர் - ஏ.ஆர் றக்ஸானா தம்பதியின் மூத்த புதல்வியாவார்.

இப்பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 70 புள்ளிகளுக்கு மேல் 64 சதவீதமான மாணவர் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் எஸ்.எம்.அருஸ் தெரிவித்தார்.

# அக்கராயன் ஏற்று நீர்ப்பாசனம் மூலம் சிறந்த பலனைப் பெறும் மக்கள்

**வி.டினோசாந்**



13 ஆம் நூற்றாண்டில் வன்னிப் பெருநிலப்பரப்பை ஆண்ட அக்கராயன் மன்னனால் கட்டப்பட்டது அக்கராயன் குளமாம். அதனோடு இணைந்த கிராமம் சிறந்த நீர் வளமும் மண்வளமும் கொண்டமைந்தது காணப்படுகின்றது.

ஆண்டாண்டு காலமாக மக்கள் இக்குளத்தை நம்பி விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

.மாரி காலங்களில் நீரை அதிகமாகப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருப்பினும் கோடைகாலங்களில் மேட்டுநிலங்களுக்கு நீரைக் கொண்டு செல்வது கடினமாக காணப்பட்டது. இதன் காரணமாகவே 1965 ஆம் ஆண்டு அக்கராயன் ஏற்று நீர்ப்பாசன முறைமை ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பகாலத்தில் டீசலின் துணைகொண்டு விவசாய நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற்றமைக்கு சான்றாக உற்பத்திகள் கிளிநொச்சி சந்தையையும் தாண்டி, யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தைவரை சென்றிருக்கின்றன என்று ஊர் மக்கள் சான்று பகிர்கின்றனர்.

இவ்வாறு மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லும் காலகட்டத்தில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இந்த ஏற்றுநீர்ப்பாசன முறைமையானது முற்றிலும் சீர்குலைந்து போனது. இதனால் உற்பத்திகளும் ஏனைய நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்தன. இதன்போது கிளிநொச்சி மாவட்டம் மேலும் பின்தங்கியே காணப்பட்டது.

பின்நாளில் ஏற்பட்ட டீசல் பற்றாக்குறை காரணமாக இத்திட்டமானது மேலும் வலுவிழந்து போனது.

இதனால், பாரிய சவால்களை எதிர்கொண்ட மக்கள் சூரியப் படல் மூலம் இயந்திரத்தை இயங்கச் செய்து நீரைப் பெற்றுக்கொள்ளும் திட்டத்தை முன்வைத்தனர். இத்திட்டமானது பலராலும் வரவேற்கப்பட்டது.

இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று வடமாகாண சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் முனைப்புக் காட்டி வந்தது.

இதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடமும் பொறியியல் பீடமும் இணைந்து செயற்பட சம்மதம் தெரிவித்தனர். அதனோடு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையும் இணைந்தது.

அச்சமயம் அரசாங்கத்தில் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறையை அறிந்து றிலையன்ஸ் நிறுவனமானது திட்ட நிதியியல் 50 சதவீதத்தினை பங்களிப்புப் செய்வதாக சம்மதம் தெரிவித்தது.

அது மட்டுமல்லாமல் CSNHA நிறுவனமும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் தமது நிதிப் பங்களிப்பை செய்தனர். இதன் பலனாக ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனம் திட்டமானது விரைவாக செயல் வடிவம் கண்டது.

கடந்த ஐப்பசி மாதம் 18 ஆம் திகதி பல நல்லுள்ளங்கள் முன்னிலையில் இத்திட்டமானது மக்களிடம் கையளிக்கப்பட்டது. இதன்போது 360 ஏக்கர் நிலப்பரப்பும்183 நேரடிப்பயனாளர்களும்1000 மறைமுக பயனாளர்களும் பயன்பெறுவர் என்று தெரியவந்தது.

**மாரி காலங்களில் நீரை அதிகமாகப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருப்பினும் கோடைகாலங்களில் மேட்டு நிலங்களுக்கு நீரைக் கொண்டு செல்வது கடினமாக காணப்பட்டது. இதன் காரணமாகவே 1965 ஆம் ஆண்டு அக்கராயன் ஏற்று நீர்ப்பாசன முறைமை ஆரம்பிக்கப்பட்டது .**

இத்திட்டத்திற்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கிய Wilde Ganzen, Cooperative society of Netherland for humanitarian activities (CSNHA), K.O.O.K, STICHTING MGM, Montfortanen giften commission Netherland, Killi People, Direkte hilfe thannir Wasser நிறுவனங்களுக்கு மக்கள் தங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தனர்.

இதுபோன்று வேறு பல திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் எம்மக்களும் மண்ணும் மேன் மேலும் வளம் பெறும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

மக்களின் முகங்களில் புன்னகையைப் பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கின்றது. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது






கொங்கோ குடியரசில் ராணுவத்துக்கு

## ஆள்சேர்க்கும் தேர்வின்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி

# 31 பேர் பலி

மேற்கு ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் ராணுவத்துக்கு ஆள்சோக்கும் தேர்வின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 31 பேர் பலியாகியுள்ளனர்.

அந்த நாட்டுராணுவத்துக்கு ஆள் சோக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதைத்தொடாந்து,கடந்தசெவ்வாயன்று நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தேர்வுநடைபெறும்மைதானத்துக்கு வந்து குவிந்துள்ளனர்.

ஒரே வாயில் கதவு வழியாக அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் மைதானத்துக்குள் நுழைய முயன்றபோது தள்ளுமுள்ளு ஏற்பட்டுள்ளது.

இதில் ஏற்பட்ட நெரிசலில் 37 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் முன்னா அறிவித்தனர். அந்த எண்ணிக்கை தற்போது 31ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

'டிஆர் கொங்கோ' என்ற ழைக்கப்படும் கொங்கோ ஜனநாயகக் குடியரசு நாட்டிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக கொங்கோ - பிராஸ்வில் என்று அழைக்கப்படும் அண்டை நாடான கொங்கோ குடி யரசில் வேலைவாய்ப்பின்மை அதிகம் காணப்படுவதால் அங்கு ராணுவப் பணியில் சோவதற்கு ஏராளமானவாகள் போட்டியிடுவதாகக் கூறப்படுகிறது.

ராணுவத்தில் மொத்தம் 1,500 இடங்களே காலியாக உள்ள நிலையில், தினந்தோறும் சராசரியாக சுமார் 700 போ அந்த இடங்களுக்கு விண்ணப்பித்து வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர். (04)

## இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களில் 100க்கும் மேற்பட்ட ரயில்கள் புரள்வு

இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மட்டும் 100க்கும் மேற்பட்ட ரயில்கள் தடம் புரண்டதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, ஜனவரி மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்கு இடையில் மொத்தம் 109 ரயில்கள் தடம்புரண்டு விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஊடகத்திற்கு கருத்து தெரிவித்த புகையிரத பொது முகாமையாளர் என்.ஜே.இண்டிபோலகே, திருத்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் புகையிரதப் பெட்டிகளில் ஏற்பட்ட குறைபாடுகளே குறித்த தடம் புரண்ட சம்பவங்களுக்குக் காரணம் எனத் தெரிவித்தார். இதற்கிடையில், 2023 ஆம் ஆண்டில் புகையிரத கடவையில் இதுவரை மொத்தம் 61 ரயில்கள் மற்றும் வாகனங்கள் மோதிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 12 பேர் உயிரிழந்ததுடன் 62 பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும், கடந்த சில மாதங்களில் தற்கொலை முயற்சிகள் மற்றும் கவனக்குறைவாக ரயில் தண்டவாளங்களில் நடந்து சென்றதால் 353 பேர் ரயில்களில் அடிபட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகளில், 154 பேர் உயிரிழந்துள்ளனர். குறைந்தது 203 பேர் காயமடைந்துள்ளனர். (த)

# விபத்துக்களினால் மாதத்திற்கு 1000 பேர் மரணம் சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தகவல்



பல்வேறு விபத்துக்கள் காரணமாக இலங்கையில் வருடமொன்றிற்கு கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகவும், இதில் 12,000 பேர் உயிரிழப்பதாகவும் சுகாதார மற்றும் கைத்தொழில் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்ற சர்வதேச ஊனமுற்றலை ஏற்படுத்தும் விபத்துக்களைத் தடுக்கும் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த இறப்புகள் பொதுவாக ஒரு மாதத்திற்கு 1000 இறப்புகள் அல்லது ஒரு நாளைக்கு 35 இறப்புகள் என்ற ரீதியில் நிகழ்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

போக்குவரத்து விபத்துக்களால் ஆண்டுதோறும் சுமார் 3000 இறப்புகள் ஏற்படுகின்றன. 2000 பேர் மூச்சுத் திணறலால் (கழுத்தை நெரித்தல் உட்பட) இறக்கின்றனர். 1000 மற்றும் 1500 பேர் முறையே நீரில் மூழ்கி இறக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டில், விபத்துக்கள் காரணமாக பொது மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் 2,500,000 பேரால் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாகவும், கிட்டத்தட்ட பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 1.3 மில்லியனிலிருந்து (2019) சுமார் 1.55 மில்லியனாக (2025) அதிகரிக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய தகவல்களின்படி, அனைத்துவித விபத்துக்களிலும் 55 வீதத்துக்கும் அதிகமானவை வீடு மற்றும் அதைச் சுற்றியுள்ள சூழலில் நிகழ்கின்றன. சுமார் 25 வீதமான சம்பவங்கள் வீதி விபத்துக்களுடன் தொடர்புடையன. ஏனையவற்றில் பெரும்பகுதி வயல் வெளிகள், பாடசாலைகள், தங்குமிடங்கள் போன்ற பகுதிகளில் ஏற்படுகின்றன.

இந்த ஆபத்தான போக்கைத் தடுக்கும் வகையில் சமூக விளைவுகளைத் தடுப்பதற்கும், இது தொடர்பான பல்வேறு துறைகளை வலுப்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும், என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். (ரெந-39)

## ஐஸ் பழக்கத்தினால் ஒரு மாதத்திற்குள் 10 பேர் தற்கொலை செய்து மரணம்

ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையாகி ஒரு மாதத்திற்குள் மாத்திரம் தற்கொலை செய்து கொண்ட சுமார் 10 பேரின் பிரேத பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர மேலதிக மரண விசாரணை அதிகாரி இரோ தோனி சமரவீர தெரிவித்துள்ளார்.

இது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலை என்றும், தற்கொலை செய்துகொண்டவர்கள் 30 முதல் 50 வயதுக்குட்பட்ட ஆண்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் நுரையீரல் தொடர்பான நோய்களால் உயிரிழக்கும் வாய்ப்புகள் அதிகம் என்றும், தான் நடத்திய பிரேதப் பரிசோதனையில் இது தெரியவந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐஸ் பாவனைக்கு அடிமையாகி உள்ளவர்கள் 2 முதல் 3 வருடங்களில் மரணமடையும் நிலை இருப்பதாகவும், தற்போது பாடசாலை மாணவர்களும் ஐஸ் பாவனைக்கு ஆளாகியுள்ளனர் என்றும், பெற்றோர்கள் இதில் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெந-40)

## மரணத்தை ஏற்படுத்திய வழக்கு 8 வருடங்களின் பின் விடுவிப்பு

யாழ்ப்பாணம் மருதங்கேணி பகுதியில் கடந்த 2015 ஆம் ஆண்டு நபர் ஒருவருக்கு கடும் காயம் விளைவித்து மரணத்தை ஏற்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்ட நபர், கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தினால் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27ஆம் திகதியன்று கடுங்காயம் ஏற்படுத்தியதால் ஒரவர் உயிரிழந்தமை தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரே, குற்றச்சாட்டுகளிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்

குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதி மன்றத்தில் விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நேற்றைய தினம் (22-11-2023) தீர்ப்புக்காகத் தவணையிடப்பட்டிருந்தது.

அதன்படி, நேற்றைய தினம் கிளிநொச்சி மேல் நீதிமனற நீதிபதி கௌரவ ஏ.எம்.எம். சஹாப்தீன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், முதலாம் சாட்சியான உயிரிழந்தவரின் மனைவி பொலிசாருக்கு வழங்கிய சாட்சி மற்றும் நீதிமன் றுக்கு வழங்கிய சாட்சியங்கள் முரண்பாடாக மாறுபட்டுக் காணப்பட்டமை மற்றும் எதிரிக்கு எதிராக வழக்குத் தொடுநர் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுப்பத்திரத்தில் உள்ள குற்றச்சாட்டு வழக்குத் தொடுநரால் நிருபிக்கப்படவில்லை என்பவற்றின் அடிப்படையில் குற்றச்சாட்டுப்பத்திரத்தில் உள்ள குற்றச்சாட்டில் இருந்து எதிரியை விடுவித்து மேல் நீதிமன்றம் விடுதலை செய்வதாக தீர்ப்பிடப்பட்டுள்ளது. (02)

## அட்டை உள்ளே சிக்கியதால் ஏடிஎம் இயந்திரத்திற்குக் குத்து விட்ட நபர்

அளுத்கம வங்கிக் கிளையொன்றின் ஏடிஎம் இயந்திரத்தைஒருவர்தாக்கியதில்ஒருலட்சம்ரூபாவுக்கும் மேல் குறித்த வங்கிக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர், ஏடிஎம் இயந்திரத்தில் பணம் எடுப்பதற்காக தனது அட்டையைச் செலுத்தியபோது அது இயந்திரத்தில் சிக்கிக் கொண்டதால் ஆத்திரமடைந்து, இயந்திரத்தின் முன்பக்கக் கண்ணாடியைக் கையால் தாக்கி அதன் இலத்திரனியல் திரையைச் சேதப்படுத்தியதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் அளுத்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.கே.ரட்ணசிங்கம் தலைமையில் இடம் பெறுகின்றன. (ரெந-42)

## பசுமாடுகளைக் கடத்தியவர் மண்டைதீவில் கைதானார்!

இறைச்சிக்காக பசுமாடுகளை வாகனத்தில் சட்டவிரோதமாக கொண்டுசென்ற நபரொருவர் யாழ்ப்பாணம் - மண்டைதீவில் நேற்று (22) கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்குகிடைத்ததகவலுக்கமைய மண்டைதீவுச் சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே கைது நடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நான்கு பசு மாடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன் தென்னிலங்கையைச் சேர்ந்த நபரொருவரும் கைது செய்யப்பட்டார். (01)



## கொழும்பு விஹார மஹாதேவிப் பூங்கா மீண்டும் கொழும்பு மாநகர சபை வசம்



அபிவிருத்திப் பணிகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்ட கொழும்பு விஹார மஹாதேவிப் பூங்கா, கொழும்பு மாநகர சபையிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் கீழ் இருந்த விஹார மஹாதேவிப் பூங்கா, கடந்த 2011 செப்டெம்பர் 30 ஆம் திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.

54 ஏக்கர் கொண்ட மேற்படி பூங்காவை உரிய அபிவிருத்தி செய்யும் பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையிலேயே அப்பூங்காவை கொழும்பு மாநகர சபைக்கு மீள வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெந-41)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2023இல் வெளியிடப்பெற்றது.